**காப்பக முகாமை தகவல் முறைமை**
**தகவல் திரட்டல் அறிவித்தல்**

பின்வரும் நோக்கங்களுக்காக உங்கள் தனிப்பட்ட விபரங்கள் திரட்டப்படுகின்றன:

(அ) ஒன்ராறியோ வேலைநலப் பணிகள் உட்பட ஒன்ராறியோ அரசாங்கத்தின் சமூக உதவித் திட்டங்களை நிர்வகித்தல்;

(ஆ) காப்பக சேவைகள், அவற்றுடன் தொடர்புடைய சேவைகள் அனைத்தையும் மேற்கொள்ளல்;

(இ) காப்பகங்கள் வழங்குவோரிடையேயும், ரொறன்ரோ பொது சுகாதாரத் துறையுடனும் விபரங்கள் பகிர்தல்;

(ஈ) ஆராய்ச்சி மேற்கொள்ளல், வசிப்பிடமைன்மை சார்ந்த தரவுகளையும் போக்குகளையும் பகுத்தாய்விடல். இத்தரவுகள் ஆட்களை இனம்காட்டா.

மேற்படி நோக்கங்களுடன், பின்வரும் நோக்கங்களுக்காக, எம்மால் இணைத்தியக்கப்படும் காப்பகங்கள் அனைத்துக்கும் உங்கள் தனிப்பட்ட அடிப்படை விபரங்களை நாங்கள் வழங்குவோம்:

(அ) காப்பக சேவைகள் தகுந்த முறையில் மேற்கொள்ளப்படுமாறு பார்த்தல் ,

(ஆ) மீள்பதிவுகளைத் தவிர்த்தல் ,

(இ) சமூகத்தில் வசிப்பிடவசதி ஏற்படுத்த உதவுதல்,

(ஈ) ஆட்களின் பாதுகாப்பை நிலைநிறுத்தல் .

உங்கள் தனிப்பட்ட விபரங்கள் திரட்டப்படுவது குறித்து நீங்கள் ஏதாவது கேட்டறிய விரும்பினால், தாராளமாக எம்முடன் தொடர்புகொள்ளவும்:

SMIS Privacy Contact
Shelter, Support and Housing Administration Division,
Metro Hall, 55 John St. 6th Floor,
Toronto, Ontario, M5V 3C6.
**தொலைபேசி: 416-392-8741**

*2006-ம் ஆண்டின் ரொறன்ரோ மாநகரச் சட்டத்தின்* பிரிவு 8(1), பிரிவு 8(2), பந்திகள் 5, 6, ரொறன்ரோ மாநகர விதிக்கோவையின் அத்தியாயம் 169, உறுப்புரை VII, *1997-ம் ஆண்டின் ஒன்ராறியோ வேலைநலச் சட்டத்தின்* பிரிவுகள் 5, 7, 38 என்பவற்றின் மூலம் அளிக்கப்பட்ட சட்டபூர்வமான அதிகாரத்துக்கு அமையவே மேலே விபரிக்கப்பட்டவாறான உங்கள் தனிப்பட்ட விபரங்கள், திரட்டப்படுகின்றன என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.